[1979 மார்ச் 17

திருப்பத்தூர் அரசினர் மருத்துவமனை.

* வினா எண் 438—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர் அரசினர் மருத்துவ மனையில் மருத்துவர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்தவும், காலி இடங்களில் மருத்துவர்களை நியமனம் செய்யவும் எடுக்கப் பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திராஜன் : திருப்பத் தூர் அரசினர் மருத்துவமனையில் தற்சமயம் நியமனம் செய்யப் பட்ட மருத்துவர்கள் 6. இந்த எண்ணிக்கையை உயர்த்து வதற்கான நடவடிக்கை ஏதும் இல்லை. தற்போது இரண்டு பணியிடங்கள் காலியாக உள்ளன. மருத்துவ மற்றும் குடும்பநல இயக்குநர் இவ்விடங்களுக்கு மருத்துவர்களை நியமித்து ஆணைப் பிறப்பித்துள்ளார். அவர்கள் பணியில் சேர்ந்தமைக் கான அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. ப. சுந்தரம் : இந்த மருத்துவமனை நமது மாவட்ட திலேயே இரண்டாவது ஸ்தானத்தைப் பெற்றிருக்கிறது. 120 படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவமனையில் இன்றையதினம் வந்து போகின்றவர்கள் எண்ணிக்கை ஏறக்குறைய 1,500 பேர்களாகும். ஆனால் அங்கிருக்கின்ற மருத்துவர்கள் ஆறு பேர்களாகும். இதனால் அங்கு வருகின்ற மக்களுக்கு சரியானபடி சிகிச்சை அளிக்க முடியவில்லை என்று அங்குள்ள மக்கள் குறைப்பட்டுக்கொள்கிறார்கள். ஆகவே இந்த குறையை நீக்குகின்ற வகையில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற .மருத்துவர்களின் தொகை, விதிகளை ஒப்பிட்டு, 120 படுக்கைகள் கொண்டமருத்துவ மனைக்கு 6 மருத்துவர்கள் இருக்க வேண்டும் என்றிருக்கிறது. அந்த முறையில் இங்கு ஆறு மருத்துவர்கள் பணியாற்றி வரு கிறார்கள். ஆகவே இப்போது மருத்துவர்களின் எண்ணிக்கையை விஸ்தரிக்கும் திட்டம் எதுவும் பரிசீலனையில் இல்லை.

திரு. தி. அன்பழகன் : தலைவர் அவர்களே, திருப்பத்தூர் அரசு மருத்துவமனை தாலூகா தலைநகர் இருக்கின்ற இடத்தில் இப்போது அமைந்திருக்கிறது. மற்ற மருத்துவ மனைகளில் எல்லாம் 100 படுக்கைகள் கொண்ட மருத்துவ மனைகளில் எட்டு முதல் 10 டாக்டர்கள் வரை பணியாற்றுகிறார்கள். ஆகவே

1979 மார்ச் 17]

120 படுக்கைகள் கொண்ட இந்த திருப்பத்தூர் மருத்துவ மனைக்கு இன்னும் அதிகமான மருத்துவர்களை நியமிக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன்: பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்புப் பிரிவுகள் தொடங்குகின்ற நேரத்தில் மருத்துவர்களின் தேவைக்கு ஏற்றபடி மருத்துவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும்.

சீர்காழி அரசு மருத்துவமனை.

* வினா எண். 439—திரு. கே. சுப்பிரவேலு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சீர்காழியில் உள்ள அரசு மருத்துவமனையினை விரிவுபடுத்துவதற்காக நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம், எனில் எத்தனை ஏக்கர் நிலம்.

(இ) அதற்கான தொகை எவ்வளவு

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : (அ) ஆம்.

(ஆ) சீர்காழி மருத்துவமனையை விஸ்தரிப்பதற்காக 4.39 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

(இ) ரூ. 33,689.40.

[முற்பகல் 9—30].

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, சீர்காழியிலே விஸ்தரிக்கப்பட இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பணி எப்போது முதல் துவங்கப்பட இருக்கிறது என்பதை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்தரராஜன் : தலைவர் அவர்களே, 1972 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 14 ஆம் தேதியிட்ட அரசு ஆணைப்படி 4·39 ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டுள்ளது. ஈட்டுத் தொகையாக ரூ. 33,689.40 வழங்கப்பட்டிருக்கிறது. அந்த நிலத்தில் 1975 ஆம் ஆண்டு 20 படுக்கைகள் கொண்ட வார்டு ரூ. 1.15 லட்சம் செலவில் கட்டப்பட்டு, மருத்துவ மனையை எதிர் காலத்தில் விஸ்தரிக்க காலி நிலம் இருக்கிறது. இப்போது விஸ்தரிக்கும் எண்ணம் இல்லை.